**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 59 of 2022**

Prosecution witness LW4 (PW4) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 09.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.சக்திவேல் | Father Name | : | திரு.மருதவேல் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A1 to A4 present.**

**முதல் விசாரணை:**

நான் பஸ்தலப்பள்ளி கிராமத்தில் வசிக்கிறேன் . எனக்கு சொந்த ஊர் சேலம் ஆத்தூர் . ரகுபதி என் மனைவின் அண்ணன் ஆவார். எனக்கு அவர் மச்சான் வேண்டும். ரகுபதிக்கு கீழ் பூங்குருதி கிராமத்தை சேர்ந்த கதிரேசன் மனைவி பாரதியுடன் தொடர் ஏற்பட்டது . பாரதியும், ரகுபதியும் ஈரோடில் உள்ள ஸ்பின்னிங் மில்லில் ஒன்றாக வேலை செய்து குடும்ப நடத்தி வந்தார்கள். கதிரேசன் என் மனைவியை என்னுடன் அனுப்பி வைக்கும்படி போன் மூலம் சொன்னார் . ரகுபதி உன் வீட்டுக்காரருடன் போய்விடும்படி பாரதியிடம் சொன்னார். பாரதி போகமாட்டேன் என்று சொன்னார் . அதன் பிறகு பாரதியை ரகுபதி உன் வீட்டுகாரருடன் போய் விடு என்று அனுப்பிவைத்தார். அதன்பிறகு கொஞ்ச நாட்கள் பாரதி உடன் கதிரேசன் வாழ்ந்து வந்தார். அதன் பிறகும் கதிரேசன் தப்பு தப்பாக பேசி வந்தார். இதற்கு இடையில் ரகுபதி பேரண்டப்பள்ளிக்கு வந்துவிட்டார் . கதிரேசன் தொந்தரவு செய்ததால் பாரதி குழந்தையுடன் பேராண்டப்பள்ளியில் ரகுபதி உடன்

தங்கியிருந்தார். கதிரேசன் பர்கூர் ஸ்டேசனில் கேஸ் கொடுத்திருந்தார் . 01.10.2021 தேதி ரகுபதி , பாரதியும் பர்கூர் காவல் நிலையம் போய் இருந்தார்கள். அங்கு விசாரித்தபோது பாரதி நான் ரகுபதியுடன் தான் இருப்பேன் என்று சொல்லிவிட்டார் . அதன்பிறகு ரகுபதியும் , பாரதியும் வீட்டிற்கு போய்விட்டார்கள்.

04.10.2021 தேதி ரகுபதி , திம்மராயப்பனுக்கு போன் செய்தார் . இவ்வாறு பிரச்சனை ஆகிவிட்டது கனபூர் ஊர்காரர்களும் , கீழ் பூங்குருதி ஊர்காரர்களும் பேச வேண்டும் என்று சொல்லிகிறார்கள் அதனால் வரும்படி சொன்னார். நாங்கள் 7 பேர்கள் டாடா மேஜிக் வண்டியில் அங்கியிருந்து புறப்பட்டோம். என்னுடன் திம்மராயன் , நந்தகுமார், ரகுபதி, ரகு , பாரதி, ராஜப்பா ஆகியோர் புறப்பட்டோம். நாங்கள் அனைவரும் பர்கூர் போனோம் . அங்கு போய் இரண்டு ஊர்காரர்களும் பேசினார்கள். பாரதி நான் ரகுபதியுடன் போவேன் எனக்கு டைவர்ஸ் வாங்கி தரும்படி சொன்னார்கள் . நீங்கள் கோர்டில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று ஊர்காரர்கள் முடிவு செய்தார்கள் . கதிரேசன் ரகுபதியை பார்த்து டைவர்சுக்கு ஆகும் செலவை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார் . அதன் பிறகு பகல் 1.00 மணிக்கு டாடா மேஜிக் வண்டியில் நந்தகுமார் வண்டி ஓட்ட நான் , நந்தகுமார், பாரதி , ரகுபதி, திம்மராயன் ஆகிய 5 பேரும் திரும்ப வந்துக்கொண்டி இருந்தபோது டோல்கேட் தாண்டி பையனப்பள்ளி அருகே வந்துக்கொண்டி இருந்தபோது ஸ்ரீ சாய் சரவணன் ஓட்டல் அருகே வண்டி வந்தபோது நாலு பேரும் இரண்டு பைக்குகளில் வந்தார்கள்.

கேசவன், பாண்டுரங்கள், சதிஷ், கதிரேசன் ஆகியோர் அந்த பைக்கில் வந்தார்கள். வண்டி Running ல் வந்துக்கொண்டி இருந்தபோது டாடா மேஜிக் வண்டியை இரும்பு ராடால் அடித்தார்கள் அதனால் வண்டியை side ல் போட்டோம். ரகுபதியை கீழே இறங்கிவாடா என்று கதிரேசன் மற்றும் சதிஷ் சொன்னார்கள். வாடா உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார்கள். ரகுபதி வண்டியை விட்டு கீழே இறங்கிய உடன் கேசவன் மற்றும் பாண்டுரங்கன் ரகுபதி கையை பிடித்து கொண்டார்கள் . சதிஷ் மற்றும் கதிரேசன் இரும்பு ராடால் தலைமீது அடித்தார்கள் (சாட்சி முன் தலையையும், பின் பக்க த்லையையும் அடையாளம் காட்டி ச்சொல்கிறார் ). அதன் பிறகு ரகுபதி தலையில் காயம் ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டார் . தடுக்க போன திம்மராயப்பனை சதிஷ் மற்றும் கதிரேசனும் இரும்பு ராடால் தலைமீது அடித்தார்கள். திம்மராயப்பனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது . அதன்பிறகு அவர்கள் அடித்துவிட்டு ஓடிவிட்டார்கள். அவர்கள் எடுத்துவந்த இரண்டு பைக்கில் அவர்கள் திரும்பி போய்விட்டார்கள் . அடிப்பட்ட ரகுபதி அந்த இடத்திலே இறந்துவிட்டார். திம்மராயப்பனுக்கு தலையில் அடிப்பட்டு நிறைய இரத்தம் வந்தது , அருகில் இருந்தவர்கள் ஆம்புலென்சுக்கு போன் செய்து அதன்பிறகு அவரை கிருஷ்ணகிரி ஜி .எச் க்கு அழைத்து போனார்கள். நானும் பாரதியும் தான் போலீஸ் ஸ் டேசனுக்கு போய் இருந்தோம்.

ஸ்டேசனுக்கு வெளியே ஒரு நபர் இருந்தார் என்ன பிரச்சனை என்று கேட்டார். பிரச்சனை சொன்னோம் , அந்த கம்ப்ளைன்டில் பாரதி கையெழுத்து போடார், அதனை எடுத்துக்கொண்டு போய் போலீஸ்

ஸ்டேசனில் கொடுத்தார். ஆஜரிலுள்ள நான்கு எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுப்பட்ட நபர்கள் ஆவார்கள். நீதிமன்றத்திலுள்ள இரும்பு ராடை கொண்டு தான் அன்றைய தினம் எதிரிகள் தாக்கினார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 59 of 2022**

Prosecution witness LW3 (PW3) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 09.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| Name | : | திரு.நந்தகுமார் | Father Name | : | திரு.திம்மராயப்பா |
|---|---|---|---|---|---|
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A1 to A4 Present.**

**முதல் விசாரணை:**

நான் பஸ்தலப்பள்ளி என்ற கிராமத்தில் வசிக்கிறேன் . நான் பெயின்டராக பணிபுரிகிறேன். ரகுபதி என் அத்தை மகன் மாமா வேண்டும் . ரகுபதிக்கு திருமணம் ஆகவில்லை . ரகுபதிக்கு கீழ் பூங்குருதியை சேர்ந்த கதிரேசன் மனைவி பாரதி என்பவருடம் பழக்கம் ஏற்பட்டது . ரகுபதியும் , பாரதியும் சேர்ந்து ஒரு 6 மாதமாக ஈரோடிலுள்ள ஸ்பின்னிங் மில்லில் வேலை செய்து ஒன்றாக குடும்ப நடத்தி வந்தார்கள் . பாரதிக்கு ஒரு குழந்தை இருக்கிறது . கதிரேசன் , ரகுபதிக்கு போன் செய்து என் மனைவியை என்னுடன் அனுப்பி வைத்துவிடு என்று போனில் மிரட்டியுள்ளார். அதன்பிறகு ரகுபதி பாரதியிடம் உன் கணவருடன் நீ போய்விடு என்று சொன்னார் பாரதி அதனை மறுத்துவிட்டு உன்னுடனே வாழ்கிறேன் என்று சொன்னார். அதன்பிறகு ரகுபதி பாரதியை அடித்து உன் புருசனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்று அழைப்பி வைத்துவிட்டார் . அதன்பிறகு ஈரோட்டில் இருந்து வந்துவிட்டு பேரண்டப்பள்ளியில் ஒரு ரூம்

வாடகைக்கு எடுத்து பெயின்டர் வேலை செய்து வந்தார் . அதன்பிறகு பாரதிக்கு கதிரேசனும் ஒன்று சேர்ந்து வாழ்ந்தபோது மீண்டும் பிரச்சனை ஏற்ப்பட்டது.

பாரதி குழந்தையை எடுத்துக்கொண்டு பேரண்டபள்ளியில் உள்ள ரகுபதி வீட்டிற்கு வந்துவிட்டார் . என்னுடைய மனைவியை என்னுடன் சேர்ந்து வைக்கும்படி கதிரேசன் பர்கூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பர்கூர் காவல் நிலைய காவலர்கள் ரகுபதியையும் , பாரதியையும் பர்கூர் காவல் நிலையத்திற்கு அழைத்து போனார்கள் . இது 01.10.2021 ல் நடந்தது அதன்பிறகு பாரதியை ஸ்டேசனில் உள்ளார்கள் கேட்டபோது தன் கணவருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று சொல்லிவிட்டார் . அதன்பிறகு ஸ்டேசனில் உள்ளார்கள் கோர்டில் போய் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள் .04.10.2021 ல் கீழ் பூங்குருதி ஊர்காரர்களும் , கனபூர் ஊர்காரர்களும் இந்த பிரச்சனை சம்பந்தமாக பேச வேண்டும் என்று கூப்பிட்டார்கள் . பஸ்தலப்பள்ளியில் இருந்து ஊர் தலைவர் ராஜப்பாவுடன் , திம்மராயப்பா, சக்திவேல், நான் , ரகுபதி , ரகுபதியுடன் வேலை செய்யும் மற்றொரு ரகு , மற்றும் பாரதி ஆகியோர் டாடா மேஜிக் வண்டியில் பர்கூர் ஸ்டேசனுக்கு அருகே பேசுவதற்காக காலை 11.00 போய் இருந்தோம். பேசிக்கொண்டி இருந்தபோது பாரதி என் கணவர் கதிரேசனுடன் வாழ பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டார். அதற்கு கதிரேசன் ரகுவே செலவு செய்து இரண்டு பேருக்கும் விவாகரத்து வாங்கி தரும்படி சொன்னார் . அதற்கு ஒத்துக்கொண்டு நான் , திம்மராயப்பா, சக்திவேல், ராகுபதி , பாரதி

எல்லோரும் எங்கள் டாடா மேஜிக் வண்டியை எடுத்துக் கொண்டு வந்துக்கொண்டிருந்தபோது கிருஷ்ணகிரி டோல்கேட் தாண்டி பையணப்பள்ளி என்ற இடத்தில் வந்துக்கொண்டிருந்தபோது சாய் சரவணன் ஓட்டல் அருகே வந்துக்கொண்டிருந்தபோது சதிஷ் மற்றும் கேசவன் ஒரு டுவீலரும், கதிரேசன் மற்றும் பாண்டுரங்கன் மற்றொரு டுவீலரும் இரண்டு இரும்பு ராடுகளை வைத்துக்கொண்டு வண்டியை நான் ஓட்டிக்கொண்டி இருந்தபோது கிளாஸ் தட்டி வண்டியை நிறுத்துமாறு மிரட்டினார்கள் , நான் வண்டியை ஓரமாக நிப்பாட்டினேன், அதன்பிறகு சதிஷ் மற்றும் கதிரேசனும் அவர்கள் வைத்திருந்த இரும்பு ராடை வைத்துக்கொண்டு ரகுவை கீழே இறங்குடா என்று சொல்லி ரகு கீழே இறங்கி பிறகு கேசவன் மற்றும் பாண்டுரங்கனும் ஆளுக்கு ஒரு பக்கம் பிடித்துக்கொள்ள கதிரேசன் ரகுவின் பின் தலையிலும் , சதிஷ் முன் தலையிலும் ரகுபதியை இரும்பு ராடால் அடித்துவிட்டார்.

அவர்கள் இருவரும் மாற்றி மாற்றி இரும்பு ராடால் அடித்தார்கள் . ரகு இரத்த காயத்துடன் கீழே விழுந்துவிட்டார் . தடுக்க போன திம்மராயப்பவை அதே கதிரேசனும் , சதிஷ் ஆகியோர் அதே இரும்பு ராடால் மேல் தலையிலும் , பின்ன தலையிலும் அடித்து காயப்படுத்தினார்கள் . கேசவன் மற்றும் பாண்டுரங்கனும் அந்த சமயத்தில் திம்மராயனை பிடித்துக்கொண்டார்கள். அதன்பிறகு கதிரேசன் பாரதியின் கழுத்தை பிடித்து நெறித்து பாரதியின் வாய்க்குள் கையைவிட்டு இழுந்தார். பாரதியின் இடது பக்க கன்னத்தில் நகத்தால் கதிரேசன் கிறிவிட்டார் . நானும் , சக்திவேலும் அதனை பார்த்துவிட்டு பயத்தில் கத்தினோம். அதன்பிறகு

ஓட்டலில் இருந்தவர்களும், அருகில் இருந்தவர்களும் அங்கு வந்தார்கள் . அதன்பிறகு கதிரேசன் , கேசவன், பாண்டுரங்கன் , சதிஷ் ஆகியோர் அவர்கள் வைத்திருந்த டுவீலரில் இரும்பு ராடுகளை எடுத்துக்கொண்டு அந்த இடத்தில் இருந்து ஓடிவிட்டார். ரகுபதி மூச்சு பேச்சு இல்லாமல் அந்த இடத்தில் இறந்துகிடந்தார் . அக்கம் பக்கத்தில் உள்ளார்கள் . ஆம்புலென்சுக்கு போன் செய்யதார்கள். அங்கு இரத்த காயத்துடன் இருந்து என் அப்பா திம்மராயப்பாவை கிருஷ்ணகிரி ஜி.எச் அழைத்துச்சென்றார்கள். கூட ஒரு ஆள் வேண்டும் என்னை ஆம்புலென்சில் அழைத்துபோனார்கள் . கம்ப்ளைன்டை கொடுக்கவேண்டி பாரதியும் , சக்திவேலும் காவல் நிலையம் போனார்கள். ஆஜரில் இருக்கும் எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுப்பட்ட நபர்கள் ஆவார்கள். நீதிமன்றத்திலுள்ள இரும்பு ராடுகளை கொண்டு தான் எதிரிகளை தாக்கினார்கள் . இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 59 of 2022**

Prosecution witness LW2 (PW2) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 09.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.திம்மராயன் (எ) சின்ன திம்மராயன் | Father Name | : | திரு.முனியப்பா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A1 to A4 Present.**

**முதல் விசாரணை:**

நான் பஸ்தலப்பள்ளி கிராமத்தில் வசிக்கிறேன் . விவசாய வேலை செய்கிறேன். என் அக்கா பெயர் ஜெயம்மா , அவரை கீழ் பூங்குருதியை சேர்ந்து ராஜப்பா என்வருக்கு திருமணம் செய்து வைத்தோம் . என் அக்காவிற்கு மூன்று குழந்தைகள் . ரகுபதி, சகுந்தலா, இன்னொரு பெயர் ஞாபகமில்லை. ரகுபதி பெயின்டர் வேலை செய்துக்கொண்டு வந்தார் . ரகுபதிக்கு பாரதி என்பவருடன் பழக்கம் இருந்தது. பாரதி கனம்பூர் , பாரதியை கதிரேசன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள் . அதன்பிறகு பாரதி என்ற பெண்ணுக்கு ரகுபதி உடன் தொடர்பு ஏற்பட்டது . பாரதியும் , ரகுபதியும் ஈரோடு மில்லில் ஒன்றாக வேலை செய்து வந்தார்கள் . கதிரேசன் வந்து ரகுபதியிடம் பாரதியை என்னுடன் அனுப்பிவிடு என்று சொன்னார்.

அதற்கு பாரதி அவர்கள் சண்டை பிடுக்கிறார்கள் நான் போக மாட்டேன் என்று சொல்லிவிட்டார். அதன்பிறகு ரகுபதி பாரதியை ஒரு

அடிப்போட்டு புருஷன் வீட்டிற்கு போ என்று அனுப்பிவிட்டார் . அதன்பிறகு ரகுபதி பேரண்டபப்பள்ளிக்கு பெயின்ட் வேலைக்கு வந்துவிட்டார். பாரதிக்கும் அவர் கணவர் கதிரேசனுக்கும் சண்டை வந்தது அதனால் பாரதி அவர் குழந்தையை எடுத்துக்கொண்டு பேரண்டபப்பள்ளியில் உள்ள ரகுபதி வீட்டிற்கு வந்துவிட்டார் . கதிரேசன் பர்கூர் காவல் நிலையத்தில் கம்ப்ளைன்ட் கொடுத்துவிட்டார். 2021 ல் அந்த கம்ப்ளைன்டை கதிரேசன் கொடுத்தார். பாரதியும் , ரகுபதியும் பர்கூர் காவல் நிலையல் அழைத்து பேசியுள்ளார்கள்.

04 ம் தேதி ரகுபதி எனக்கு போன் போட்டு பாரதி கதிரேசனுடன் வாழ விரும்பவில்லை என்றும் , இது சம்பந்தமாக கனம்பூர் ஊர்காரர்கள் , கீழ் பூங்குருதி ஊர்காரர்களுடன் பேச வேண்டும என்று என்னை கூப்பிட்டார் . நாங்கள் டாடா மேஜிக் வண்டியில் நான் ரகுபதி , பாரதி , ஊர் தலைவர் ராஜப்பா , பேராண்டபப்பள்ளியை சேர்ந்த மறறொரு ரகுபதி , என் மகன் நந்தகுமார், என் அக்கா மருமகன் சக்திவேல் ஆகிய 7 பேரும் புறப்பட்டு பர்கூர் போனோம், அந்த ஊர்காரர்களும், எங்கள் ஊர்காரர்களும் பேசினோம், பாரதியிடம் ஊர்காரர்கள் உன் புருஷனுடன் வாழ போகிறாயா என்று கேட்டார்கள், பாரதி அதற்கு நான் புருஷன் உடன் வாழ போகவில்லை என்று சொன்னார் அப்போது காலை 11.30 மணி இருக்கும். நீங்கள் வக்கீல் வைத்து கோர்டில் டிவோஷ் வாங்கிக்கொள்ளும்படி இரண்டு ஊர்காரர்களும் சொன்னார்கள். இரண்டு வக்கீல்களுக்கும் நானே பணம் கொடுத்து டிவோஷ் வாங்கிக்கொள்வதாக ரகுபதி சொன்னார் . அதன்பிறகு பர்கூர் இருந்து பகல் 1.20 மணிக்கு புறப்பட்டு பஸ்தலப்பள்ளிக்கு திரும்பி அதே

டாடா மேஜிக்கில் வந்துக்கொண்டியிருந்தபோது டோல்கேட் தாண்டி பையணப்பள்ளி கட்டிங் அருகே வந்துக்கொண்டு இருந்தபோது இரண்டு டுவீலர்களில் வந்த கதிரேசன்.

பாண்டவன் , சதிஷ் , கேசவன் ஆகியோர் இரும்பு ராடை எடுத்து வந்து Attack செய்தார்கள், எங்கள் வண்டியின் glass –யை தட்டினார்கள். சாய் சரவணன் ஓட்டல் அருகே வண்டியை நிறுத்தினார்கள் . கதிரேசன், பாண்டவன், சதிஷ், கேசவன் இவங்க நான்கு பேரும் வந்து சதிஷ் மற்றும் பாண்டவன் ஆகியோர் ரகுபதி மீது இரும்பு ராடால் அடித்தார்கள் , வண்டியில் ரகுபதி இருந்தபோது நீ கீழே இறங்கி வாடா என்று சொன்னார்கள் . வண்டியில் இருந்து நான் , திம்மராயப்பா, நந்தகுமார், சக்திவேல், பாரதி , வண்டியில் இருந்து இறங்கினோம் . சதிஷ் மற்றும் பாண்டவன் ஆகியோர் அவர்கள் வைத்திருந்த ராடால் ரகுபதியின் முன் நெற்றிலும் , பின் தலையிலும் அடித்தார்கள், ( தற்போது சாட்சி கதிரேசனும், சதிஷ் ஆகியோர் ரகுபதியை அடித்துக்கொண்டியிருந்ததாக , பாண்டவன் மற்றும் கேசவன் ஆகியோர் ரகுபதியை பிடித்துக்கொண்டியிருந்ததாக கூறுகிறார் ). கதிரேசனும் , சதிஷ் ஆகேிோர் ரகுபதியின் முன் பக்க நெற்றிலும் , பின் த்லையிலும் அடித்து காயப்படுத்தினார்கள் . தடுக்கபோன என்னை சதிஷ் மற்றும் கதிரேசன் , தலையின் வலது புறத்திலும் , நடுத்தலையிலும், இடது பக்க தலையிலும் , பின் பக்க தலையின் கீழ் பகுதியிலும் , இரும்பு ராடால் அடித்து காயப்படுத்தினார்கள் . (சாட்சி தன் தலையில் கையை வைத்து அடிப்பட்ட இடத்தை சொல்கிறார்). ரகுபதி அந்த இடத்திலே இறந்துவிட்டார். பாரதியை அவருடைய கணவர் கையால் முகத்தின் மீது கிறிவிட்டார்,வாயில்

கிறிவிட்டார், கழுத்தை பிடித்து நெறித்துவிட்டார் . அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டது. அதன்பிறகு கிருஷ்ணகிரி ஜி.எச்–க்கு போனேன். மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள் . ஆஜரில் இருக்கும் நான்கு எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுப்பட்ட நான்கு எதிரிகள் ஆவார்கள் . தற்போது நீதிமன்றத்திலுள்ள இரும்பு ராடுகள் தான் எங்களை அடிக்கப்பயன்படுத்திய ராடுகள் ஆகும். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN